அரசு ஒத்துக்கொள்கிறதா? வருங்காலத்திலேயாவது இப்படிப் பட்ட தவறுகள் ஏற்படாவண்ணம் அறுவடைக் காலங்களில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் நெல் கொள்முதலைச் செய் வதற்கு அரசு முன்வருமா? இப்படிப்பட்ட தவறைத் தெரிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே சர்வ கட்சிக் குழு போட்டாகிவிட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர் களே, உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் ஒரு இம்மி அளவுகூட, கடுகளவுகூடத் தவறு கிடையாது. மத்திய அரசும் மாநில அரசும் உணவுக்கொள்கையை இருக்கின்ற நெருக்கடி நிலைமை என்று பார்த்து வகுக்கிறோம். எனவே, கொள்கையிலே எப்படிப்பட்ட தவறும் இல்லை. ஆனால் கொள்கையை நிறை வேற்றுவதிலே நாணயமாய், நேர்மையாய், உண்மையாய் நிறை வேற்றக்கூடிய பலபேர் இருக்கிறார்கள். சிலபல இடங்களில் குறைபாடுகள் ஏற்படக்கூடும். அந்தக் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றபோது நாம் அதைத் தீர்க்கத் தயாரா இருக் கிறோம். செய்ய வேண்டியதைச் செய்யாமல் விடுவது குறை; செய்யக் கூடாத ஒன்றைச் செய்வது குற்றம். இந்த இரண்டும் இருக்குமேயானால்கூட அதைத் தீர்ப்பதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும். கொள்கையைப் பொறுத்து எந்த நிலையும் ஏற்படவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

## 7. அரசினர் சட்ட முன்வடிவு

### மாவட்டக் காவல்—சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு மாவட்டக் காவல்—சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

[1981 எப்ரல் 2

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்கு பிரச்னையைக் கிளப்புகிறேன். என்னவென்றால், இது அவையையே அவமதிக்கிற காரியமாகும். அரசினர் சட்டமுன்வடிவிலே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மாவட்டக் காவல் — சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவை திரு. எம். ஜி. இராமச்சந்திரன், முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள் என்று போடப்பட்டிருக்கிறது. அவைக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள். கூட்டுப் பொறுப்பு இருக்கலாம். ஆனாலும் அவைக்கு வந்திருக்கும்போது, இங்கே இருக்கக்கூடிய...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூட்டுப் பொறுப்பு அதிலே ஒன்றும் தப்பில்லை. அது முறையானதும் கூட.

திரு. அ. ரகுமான்கான் : சபைக்கு வந்திருந்தும் சம்பந்தப் பட்ட முதலமைச்சர் முன்மொழிய மாட்டேன் என்று சொன்னால் ................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை நீங்கள் சொல்வது தவறு, எந்த அமைச்சர் வேண்டுமானாலும் இன்னொரு அமைச்சருக்காக முன்மொழியலாம். அது சாதாரணம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே அப்படி இருந்திருக்கிறது. அப்பொழுது நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக இல்லை. ஆகவே உங்களுக்குத் தெரியவில்லை: (பலத்த மேசையொலி) (குறுக்கீடு) கூட்டுப் பொறுப்பு ஆகவே, அது எல்லாக் காலத்திலும் எல்லாச் சட்டமன்றங்களிலும் இருக்கிற நடைமுறை. ஆகவே அதில் ஒன்றும் ஒழுங்குப் பிரச்னைக்கு இடம் இல்லை.